**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1507/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுப்பையா | த–பெ | சுப்பையா |
| ஊர்: | : | ஆத்தங்குடி | | |
| வயது: | : | 66/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலிவேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஆத்தங்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். 13.02.2024 அன்று எனது தம்பி முருகேசன் என்பவரும் அவரது மகன் குருதர்சன் என்பவரும் XL இருக்கர வாகனத்தில் வீட்டில் இருந்து முடி வெட்டுவதற்காக கிளம்பி காலை 11.00 மணிக்கு சென்றார்கள். பழைய ஆத்தங்குடியில் இருந்து ஆத்தங்குடிக்கு செல்லும் இடையில் உள்ள சாமி பொட்டலில் வந்து கொண்டிருந்த போது TATA ACe வாகனம் ஒன்று அவர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக எனது மகன் ராசு என்பவர் எனக்கு தகவல் சொன்னார். மேலும் அவர்களை திருமயம் மருத்துவமனையில் வைத்துள்ளதாக சொன்னார்கள். உடனே நான் கிளம்பி அங்கு சென்று பார்த்த போது குருதர்சனுக்கு காரைக்குடியில் சிகிச்சைக்கு செல்ல இருப்பதாக சொன்னார்கள். எனது உறவினர் ராசு என்பவர் என்னிடம் தொடர்பு கொண்டு குருதர்சன் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாக சொன்னார். சற்று நேரத்தில் அவர் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். பின்னர் நான் குன்றக்குடி காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி விபத்தை ஏற்படுத்தியவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு நான் புகார் அளித்தேன் அந்த **புகார் அ.சா.ஆ.1**. போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். குன்றக்குடி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை எழுதியது யார் என்றால் எனக்கு தெரியாது. புகாரில் கையொப்பம் மட்டும் செய்தேன். புகாரை படித்து காட்டினார்கள். புகாருக்கு எந்த விவரமும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:41:40 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.